**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பூவிருந்தவல்லி.**

| | |
|---|---|
| Original Suit No. | O.S. 122/2021 |
| Deposition of witness for | Plaintiff |
| Serial No. of witness | PW1 |
| Name | சத்தியமூர்த்தி |
| Father's Name/ Husband's Name | வைத்தி |
| Village | |
| Taluk | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Oath Act, 1969 of day of 07th July, 2026. | |

**<u>பிரதிவாதிகள் 12 மற்றும் 13 தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 21 செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்தினை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் பகுதி சொத்தை விற்பனை செய்துவிட்டேன். நான் மேற்படி விற்பனை செய்த விவரத்தை எனது பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் எனது தகப்பனார் வைத்தி நாயக்கர் எனக்கு அதில் கண்டுள்ள சொத்தை செட்டில்மென்ட் செய்வதற்கு முழு உரிமை உள்ளது என்று சரத்துகள் உள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் பக்கம் 2ல் "சொத்தானது வாரிசுதாரர் என்ற முறையில் எனக்கு கிடைக்க பெற்று அது முதல் எனது

அனுபவித்தில் இருந்து வந்ததாக" என்ற சரத்துகள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் கூட்டு குடும்ப சொத்தாக தான் அனுபவித்து வந்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 22 வைத்தி நாயக்கரின் மகனான தனபால் என்பவருக்கு செய்து கொடுத்த செட்டில்மென்ட் என்றால் சரிதான்.

2. ச.எண் 187/2 ராமாபுரம் கிராமம் என்ற சொத்தில் முழுவிஸ்தீரணத்தில் ஒரு பகுதியை தான் வா.சா ஆ 22 செட்டில்மென்ட் ஆவணம் மூலம் செட்டில்மென்ட் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த ஆவணத்திலும் வைத்திநாயக்கர் அவருக்கு கிடைக்க பெற்ற சொத்து என்று சரத்துகள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டோம். வாய்மொழி பாகபிரிவினை பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 20 மூலம் சௌந்தர்ராஜன் என்பவருக்கு ச.எண் 184/3 ராமாபுரம் கிராமம் உள்ள சொத்தை செட்டில்மென்ட் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வைத்தி நாயக்கருக்கு அந்த சொத்தை செட்டில்மென்ட் செய்ய முழு உரிமை உள்ளது என்று சரத்துகள் உள்ளது என்றால் சரிதான். ஆனால் கூர்சீட்டு மூலம் பாகம் செய்து கொண்டோம்.

3. நான் அந்த கூர்சீட்டை ஆவணமாக குறியீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 1 செட்டில்மென்ட் ஆவணத்தில் உள்ள சொத்தை மட்டும் தான் பொது சொத்தாக கருதினோம் என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கூட்டு குடும்ப சொத்து என்ற வார்த்தையை எனது தாவாவிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என்னை பொறுத்தவரை வைத்தி நாயக்கரின் முழுசொத்தும் கூட்டு குடும்ப சொத்தாக கருதப்பட்டது என்றால் சரிதான். நானும் எனது சகோதர, சகோதரிகளும் வழக்கு சொத்து மற்றும் மற்ற சொத்துகள் வாங்குவதற்கு எந்த பங்கும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அது மூதாதயர் சொத்தாகும். வழக்குசொத்தானது 1984 ல் ஏற்படுத்திய கூர்சீட்டின் மூலமாக கிடைத்தது என்றால் சரியல்ல. அனைத்து வாரிசுகளுக்கும் கிடைத்தது.

4. எனது பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் எதன் அடிப்படையில் வழக்குசொத்து மட்டும் பொது சொத்தாக கருத வேண்டும் என்று சொல்கிறேன் என்றால் பதிவு செய்யப்படாத கூர்சீட்டின் படியாகும். சௌந்தரர் ராஜன் என்பவர் என்னிடம் சமாதானம் பேச வந்நதாக சொல்லும் நிலையில் அது எந்த வருடம் நடந்தது என்றால் 2018 ம் வருடம் ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 1 செட்டில்மென்ட் ஆவணம் எனக்கு

தெரிந்து தான் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா ஆ 7 ஆவணத்தில் அசல் வழக்கு எண் 192/2014 ல் பிராதில் எப்போது வா.சாஆ 1 செட்டில்மென்ட் ஆவணத்தை குறித்து தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5. எனது தகப்பனார் மற்றவர்களுக்கு கொடுத்த சொத்தை பொது சொத்து என்று குறிப்பிட்டுவிட்டு சௌந்தர் ராஜனுக்கு கொடுத்த சொத்தை மட்டும் பாகம் கேட்பது தவறு என்றால் சரியல்ல. அவருக்கும் ச.எண் 184 ல் பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு ச.எண் 184 ல் கூடுதலாக சொத்தை கொடுத்தால் இந்த வழக்கு சொத்தை பொது சொத்தாக கருதவேண்டும் என்று நான் சொல்கின்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொது சொத்தாக கருத வேண்டும் என்று எனக்கும் எனது சகோதர, சகோதரிகளுக்கும் புரிந்துணர்வு இல்லை என்றால் சரியல்ல. கூர்சீட்டு மூலம் பிரித்துகொண்டோம். ச.எண் 184/3 ல் சௌந்தர்ராஜனுக்கு எந்த வருடம் சொத்து கொடுக்கப்பட்டது என்றால் குறிப்பாக ஞாபகம் இல்லை. ஆனால் கூர்சீட்டு செய்து கொண்ட பின்பாகும்.

6. இந்த வழக்கில் தாவாசொத்தை பொது சொத்தாக கருத வேண்டும் என்பதற்கு ஆதரவாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எனக்கு செட்டில்மென்ட் மூலமாக கிடைத்த சொத்தை விற்பனை செய்துவிட்டு சௌந்தராஜனுக்கு கிடைத்த சொத்தை அபகரிக்க

வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வா.சா ஆ 21 செட்டில்மென்ட் ஆவணத்தில் கிடைக்க பெற்ற சொத்தை தவிர்த்து மற்ற சொத்துகளும் கிடைத்தது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் ச.எண் 187 தவிர்த்து மற்ற சொத்துக்களும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கும்,அசல் வழக்கு எண் 192/2014 வழக்கு சொத்துக்கள் பொது சொத்துக்கள் என்பதன் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றும், எனது தனிப்பட்ட சொத்து கிடையாது என்றால் சரிதான். அது அனைவருடைய சொத்தாகும்.

7. அசல் வழக்கு எண் 192/2014 எந்த நிலையில் உள்ளது என்றால் அந்த வழக்கு நடத்தப்படாததால் தள்ளுபடி ஆகிவிட்டு பின்பு அதனை எடுக்க இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது. 1984 வருடம் கொண்ட கூர்சீட்டின் மூலம் எனது தகப்பனாருக்கு கிடைக்க பெற்ற சொத்தை எனது மூதாதயர் சொத்து என்று என்னால் குறிப்பிட இயலாது என்றால் சரியல்ல. தாவாசொத்தில் நான் தற்போது சுவாதினத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் பிராதில் எனது சுவாதினத்தை குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாவாசொத்தில் சுவாதினத்தில் இருப்பதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. சௌந்தர்ராஜன் தாவாசொத்தில் சுவாதினத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. என்னை பொறுத்தவரை வைத்தி நாயக்கருக்கு சொத்தில் தனிப்பட்ட உரிமை இல்லை என்றும் சொல்லும் நிலையில் அவரது பாகத்தை மட்டும் விடுதலை செய்து கொடுக்க இயலும் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் எனக்கு செட்டில்மென்ட் செய்து கொடுத்தது தவறு என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை கோருவதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டும் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மீதி நான் உரிமை கோருவதற்கு எந்த பொது அறிவிப்பும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். 12 மற்றும் 13 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் வழக்கு சொத்தில் காம்போன்ட் வேலி போடும் போது தெரிய வந்தது.

9. ஆனால் மேற்படி தகவலை எனது பிராதிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிரையம் ஏற்படுத்தும் போது அசல் வழக்கு எண் 192/2014 நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு எப்போது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் 2018 ம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டது. Restore Petition 2019 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். 12 மற்றும் 13 பிரதிவாதிகளுக்கு 19.04.2019 தேதி

பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தேதியில் Restore Petition மட்டும் தான் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கை பற்றி 12 மற்றும் 13 பிரதிவாதிகள் தெரிந்து கொள்ள எந்த வாய்ப்பும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முகாந்தரம் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை முழுவதுமாக செய்யப்பட்டது.**

நீதிமன்றத்தில் என்னால் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புதலளிக்கப்பட்டபின் அவரது கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

R VAISHNAVI
Digitally signed by R VAISHNAVI
Date: 2026.07.07 17:50:27 +0530

ADDITIONAL DISTRICT MUNSIF
POONAMALLEE